<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : அமுதா | க/பெ. | : வெள்ளைச்சாமி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : சோழகுளத்துப்பட்டி |
| தேதி | : 12.03.2025 | வயது | : 38/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.46 A.M. – 11. 55 A.M.

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குச் சொத்தில் பாகம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 07.02.2024 ம் தேதியிட்ட சக்கரை நல்லியப்பன் வகையறா கொடிவழி ஜாபிதா – அசல் – வா.சா.ஆ-1 ஆகவும்,

2) 19.09.2023 ம் தேதியிட்ட ஊராளிபட்டி கிராமம், சர்வே எண்.20/14A க்கு நல்லியப்பன் மனைவி மற்றும் மகன்கள் பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா (பட்டா எண்.1095) – இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ-2 ஆகவும்,

3) 19.05.1997 ம் தேதியிட்ட 1, 2 பிரதிவாதிகள் மற்றும் குமார் என்பவர், 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ–3 ஆகவும்,

4) 27.09.2023 ம் தேதியிட்ட ஊராளிபட்டி கிராமம், சர்வே எண்.20/14A க்கான அரசு வழிகாட்டி மதிப்பு – இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ–4 ஆகவும்,

5) வாதி அமுதாவின் ஆதார் சான்று அட்டை – ஒப்பீட்டு நகல் – வா.சா.ஆ–5 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன், பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–5 வரை குறியீடு செய்யப்படுகிறது. )**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 12.03.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.03.12 11:44:29 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.